மழையின்றி ஊரணிகள் வறண்டுவிட்டதாலும் கிராமமக்கள் வேறு இடங்களுக்கு குடியேறுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பது குறித்து"

அறிக்கை.

பொதுவாக இங்கு சொல்லப்பட்டுள்ள கிராமங்களில் திறந்த கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் சுமாராக குடிக்கும்படியாக உள்ளது. ஆனால் அந்தத் திறந்த கிணறுகள் கோடையில் வற்றி விடுகின்றன. வறட்சி நிலையைச் சமாளிப்பதற்கு ஆழ்குழாய்க் கிணறுகளை நிறுவினால் பெரும்பாலும் உப்புநீர் தான் கிடைக்கிறது. ஆகையால் தற்போதைய வறட்சி நிலையைச் சமாளிக்க வண்டியிலோ அல்லது லாரியிலோ மேற்படி கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கிராமங்களில் நிரந்தர குடிநீர் பிரச்சினையை தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவதற்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்குவதன் மூலமே தீர்க்க முடியும். அதற்கான விரிவான ஆய்வுகள் செய்வதற்காக தற்பொழுது ஒரு தனி உபகோட்டம் 5—2—1987-லிருந்து செயல்பட்டு வருகிறது. ஆய்வு வேலைகளை முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்து முடிந்ததும் மேற்படி கிராமங்கள் அனைத்திற்கும் நிரந்தர குடிநீர் கிடைக்க வழியுள்ளது.

(ஈ) செங்கற்பட்டு மாவட்டம் கண்டிகை கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் மயக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி.பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே அறிக்கை அவையின் முன் வைக்கப்படுகிறது.

"4—3—1987 ஆம் தேதி பிற்பகலில் தாம்பரத்திற்கு அருகே உள்ள நல்லம்பாக்கம் கண்டிகை என்ற கிராமத்தில் உள்ள சத்துணவுக் கூடத்தில் சத்துணவு சாப்பிட்ட குழந்தைகள் 162 பேர் வாந்தி மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்

1987 ஏப்ரல் 4] [பேரவைத் தலைவர்]

பட்டிருப்பதால் அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து."

அறிக்கை.

செங்கல்பட்டு மாவட்டம், நல்லம்பாக்கம் கண்டிகை கிராமத்தில் செயல்படும் ஊராட்சி ஒன்றியப் பள்ளி சத்துணவு மையத்தில் 4—3—1987 அன்று 175 குழந்தைகளுக்கு பகல் சுமார் ஒரு மணி அளவில் சத்துணவு வழங்கப்பட்டது. முதலில் உணவை உட்கொண்ட 10 குழந்தைகள் தங்களுக்கு மயக்கம் வருவதாக கூறினார்கள். அதனால் அந்த 10 குழந்தைகளையும் மேற்படி பள்ளியின் தலைமை ஆசிரியர் உடனடியாக பஸ் மூலம் அருகில் உள்ள குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு அவரும் சென்றார். பின்னர் மீதம் உள்ள மாணவர்களில் சிலரும் தங்களுக்கு ஏதோ கோளாறு இருப்பதாக தெரிவித்ததின் பேரில் ஆசிரியர்களும், பெற்றோர்களும், 149 குழந்தைகளை ஒரு லாரியிலும், மற்ற வாகனங்களிலும் அழைத்துச் சென்று முதலில் கூடுவாஞ்சேரி அரசு மருத்துவ மனையில் சேர்த்தனர். அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் அவர்கள் யாவரும் செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

குரோம்பேட்டையில் சேர்க்கப்பட்ட 10 மாணவர்களுக்கும், செங்கல்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 149 மாணவர்களுக்கும் மருத்துவ அதிகாரிகள் தகுந்த சிகிச்சை அளித்தனர். இவர்களுக்கு மாவட்ட அதிகாரிகள் தகுந்த ஒத்துழைப்பு நல்கினர். தற்போது குரோம்பேட்டையில் அனுமதிக்கப்பட்ட 10 மாணவர்களும், செங்கல்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 149 மாணவர்களும் பூரண குணமடைந்ததால் மருத்துவ மனையிலிருந்து தங்கள், தங்கள் இல்லங்களுக்கு 5—3—1987 மற்றும் 6—3—1987-ம் தேதிகளில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது பற்றி திருப்போரூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 75/87-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

மேற்படி மையத்தில், இச்சம்பவம் நடைபெற்ற போது பொறுப்பில் இருந்த அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் ஆகியோர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர். மேற்படி பள்ளியில் தொடர்ந்து சத்துணவு வழங்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு தற்போது எப்போதும் போல் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.